

மூத்த தமிழறிஞர் – திராவிட இயக்கச் சிந்தனையாளர் (நினைவில் வாழும்) முனைவர் மா. நன்னன் அவர்களின் துணைவியார் திருமதி பார்வதி அம்மையார் அவர்கள் நேற்று இயற்கை எய்தினார். தகவல் அறிந்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சைதை – சின்னமலை பகுதியில் உள்ள நன்னன் அவர்களின் இல்லம் சென்று, பார்வதி அம்மையார் அவர்களின் திருவுடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். முன்னாள் அமைச்சர்கள் எ.வ. வேலு, மா. சுப்பிரமணியன், துணை மேயர் மு. மகேஷ் குமார் உள்ளிட்டோர் உடன் உள்ளார்கள்.




விருதுநகர் வடக்கு மாவட்ட வர்த்தகர் அணி சார்பில் தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவித்து மற்றும் மல்லாங்கிணறு பேரூராட்சியில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை முன்னாள் தமிழ்நாடு நிதி , சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சரும் , விருதுநகர் வடக்கு மாவட்ட கழகச் செயலாளருமான தங்கம் தென்னரசு வழங்கினார்.

### திருநெல்வேலி மாவட்ட கீழ்பகுதி – தாமிரபரணி பாசன

# கால்வாய்களில் உடனே தண்ணீர் திறந்து விடுவீர்!

### மு.அப்துல் வஹாப் கோரிக்கை!

நெல்லை.ஜுன் 6-

திருநெல்வேலி மாவட்டத்தில் திருநெல்வேலி கால்வாய் - பாளையங்கால்வாய் கோடகன் கால்வாய் ஆகிய கால்வாய்களில் உடனடியாக தண்ணீர் திறந்து விட வேண்டுமென நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. பொறுப்பாளரும் பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினருமான மு.அப்துல் வஹாப் கோரிக்கை வருமாறு:-

திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரபரணி பாசன அமைப்பில் மேல் பகுதியில் உள்ளதெற்கு கோடை மேலழகியான கால்வாய் வடக்கு கோடை மேலழகியான் கால்வாய் நதியுண்ணி கால்வாய் கன்னடியன் கால்வாய் ஆகிய நான்கு கால்வாய்களிலும் கார் சாகுபடிக்காக ஜுன்1 ஆம தேதி தண்ணீர் திறந்து விடப்பட்டிருப்பது மிக்க மகிழ்ச்சி அளிக்கிறது.ஆனால் திரு நெல்வேலி மாவட்டத்தின் கீழ் பகுதியில் உள்ள திருநெல்வேலி கால்வாய் கோடகன் கால்வாய் பாளையங் கால்வாய் ஆகிய கால்வாய்களுக்கு பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்படாததால் திருநெல்வேலி பாளையங்கோட்டை தாலுகா உட்பட்ட விவசாயிகள் மிகுந்த ஏமாற்றம் அடைந்துள்ளனர். குதிரை பேரம் நடத்தி பொய்யாட்சி நடத்துகிற த.வெ.க.அரசு அம்பாசமுத்திரம் இடைத்தேர்தலை கருத்தில் கொண்டு அம்பாசமுத்திரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பாசன நில பகுதிகளுக்கு மட்டும் தண்ணீர திறந்துவிட்டு திருநெல்வேலி பாளையங்கோட்டை தாலுகா விவசாயிகளை மாற்றாந் தாய் மனப்பான்மையுடன் ஓர வஞ்சனையுடன் புறக்கணித்த கொடுஞ்செயலை நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க.சார்பில் வன்மையாக கண்டிப்பதுடன் உடனடியாக விவசாயிகள் நலன் கருதி பாளையங்கால்வாய் திருநெல்வேலி கால்வாய் கோடகன் கால்வாய் ஆகிய கால்வாய்களில் தண்ணீர் திறந்து விட வேண்டுமென,தமிழக அரசுக்கும் திருநெல் வேலிமாவட்ட ஆட்சி நிர்வாகத்திற்கும் தாமிரபரணி பாசனநீர்வளத் துறைக்கும் விவசாயிகள் சார்பில் வேண்டுகோள் விடுக்கிறேன்.

இவ்வாறு அவர் கோரிக்கை மனுவில் கூறியுள்ளார்.

### திருச்சியில் முதல்வர் விஜய் பேச்சு!

# நடக்கும் தவறுகளை சரி செய்ய யார் மேலாவது பழி போடுகிறார்!

### நெல்லையில் – முன்னாள் பேரவைத் தலைவர் மு.அப்பாவு பேட்டி!



நெல்லை. ஜுன் 6-

திருச்சியில் பேசிய முதலமைச்சர் விஜய் நடக்கும் தவறுகளை சரி செய்யாமல் யார் மேலயாவது பழி போட வேண்டும் என்றே பேசுகிறார் இது முதலமைச்சரின் இயலாமை யை வெளிப்படுத்துவதாக உள்ளது. என்றும் தமிழகத்தில் நடக்க உள்ள இடைத்தேர்தலில் 5 தொகுதிகளிலும் தி.மு.க.தலைவர் மு.க.ஸ்டாலின் கைகாட்டும் வேட்பாளர்தான் வெற்றி பெறுவார்கள்.என முன்னாள் சட்டப் பேரவை தலைவர் மு.அப்பாவு கூறினார்.

கன்னியாகுமரி மாவட்டம் பேச்சிப்பாறை அணையில் இருந்து இராதாபுரம் கால்வாயில் தண்ணீர் திறந்துவிட கோரி முன்னாள் பேரவை தலைவர் மு.அப்பாவு நெல்லை மாவட்ட ஆட்சியர் ஆனந்த மோகனை சந்தித்து மனு அளித்தார்.

பின்னர் முன்னாள் பேரவை தலைவர் மு.அப்பாவு செய்தியாளர் களிடம் தெரிவித்ததாவது.

கன்னியாகுமரி மாவட்டம் பேச்சிப்பாறையில் இருந்து நெல்லை மாவட்டம் ராதாபுரம் பகுதிக்கு விவசாயத்திற்காக இராதாபுரம் கால்வாயில் ஜுன் 1 ந் தேதி வழக்கமாக திறக்கப் படும், கடந்த தி.மு.க.ஆட்சி காலத்தில் முறையாக திறக்கப்பட்டது .ஆனால் பேச்சிப்பாறை அணையில் இருந்து

இராதாபுரம் பகுதிக்கு தண்ணீர் திறப்பதற்கு தற்போது வரை அரசாணை வெளியிடப்படவில்லை என்றும்,ஜுன் 16ஆம் தேதிக்குள் தண்ணீர் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்துள்ளோம்,இதன் மூலம் இராதாபுரம் பகுதியில் உள்ள 52 குளங்கள் நிரப்பப் படும் மற்றும் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்கள் நேரடியாகப் பயனடையும். ஒருவேளை 16 ஆம் தேதிக்குள் அரசாணை வெளியிடப் படாவிட்டால்,விவசாயிகள் மற்றும் பொதுமக்களைத் திரட்டிப் போராட்டம் நடத்தவும் தயங்கமாட்டோம் .

த.வெ.க.அரசு தேர்தலுக்கு முன்பு ஒரு வார்த்தையும் தேர்தலுக்குப் பின்பு ஒன்றும் பேசிவருகிறார்கள். திருச்சியில் பேசிய முதலமைச்சர் விஜய் நடக்கும் தவறுகளை சரி செய்யாமல் யார் மேலயாவது பழி போட வேண்டும் என்றே பேசுகிறார் இது முதலமைச்சரின் இயலாமை யை வெளிப்படுத்துவதாக உள்ளது. மேலும் 8 அமைச்சர் தருவதாக கூறி அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்களை வாக்களிக்க வைத்துவிட்டு தமிழக வெற்றிக் கழகத்தினர் ஏமாற்றிவிட்டார்கள்.எம்.ஜி.ஆர். ஆரம்பித்த கட்சியை காலி செய்துவிட்டார்.இன்பதுரை வெற்றி செல்லாது என உச்சநீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு வலுவான நீதி அரசரின் அற்புதமான தீர்ப்பு.காலம் கடந்து வந்தாலும் நல்ல தீர்ப்பு. இது இந்திய ஜனநாயகத்தையும் அரசியலமைப்பையும் பாதுகாத்துள்ளது. சட்டமன்ற தேர்தல்களில் சமூக ஊடகங்கள் மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திப் பொய்யான தகவல்களைப் பரப்பி மக்களை ஏமாற்றிச் சில கட்சிகள் வெற்றி பெற்றன.ஆனால் இப்போது மக்கள் உண்மையை உணர்ந்துள்ளார்கள்.

நாங்கள் வெற்றி வாய்ப்பை இழந்தது கூட எங்களுக்கு பெரிதாக தெரியவில்லை,எங்கள் தலைவர் மு. க.ஸ்டாலின் வெற்றி வாய்ப்பை இழந்தது தான் மன வேதனையாக உள்ளது.அவர் இல்லாத சட்டமன்றத்தை நினைத்துக் கூட பார்க்க முடியவில்லை. எனவே எதிர்வரும் இடைத் தேர்தலில் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரம் சட்டப்பேரவையை தொகுதியில் நின்று வெற்றி பெற்று சட்டமன்றத்திற்கு செல்ல வேண்டும் என்பது தென்பகுதி மக்களின் விருப்பமாக உள்ளது.தமிழகத்தில் நடக்க உள்ள இடைத்தேர்தலில் 5 தொகுதிகளிலும் தி.மு.க.தலைவர் மு.க.ஸ்டாலின் கைகாட்டும் வேட்பாளர்தான் வெற்றி பெறுவார்கள்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

பேட்டியின் போது பொதுக்குழு உறுப்பினர் பரமசிவ அய்யப்பன், ஒன்றிய செயலாளர் ஜோசப் பெல்சி ஆகியோர் உடனிருந்தனர்.



தேனி வடக்கு மாவட்டம் பெரியகுளம் தொகுதி வடுகபட்டியில் வள்ளலார் அறக்கட்டளையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு பெரியகுளம் வடக்கு ஒன்றிய செயலாளர் எல்.எம். பாண்டியன் ஏற்பாட்டில வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்பி 200க்கும் மேற்பட்டோருக்கு மதிய உணவு வழங்கினார் உடன் முன்னாள் எம்.எல்.ஏ. சரவணகுமார். வழக்கறிஞர் நிஷாந்த் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



தென்காசி தெற்கு மாவட்டம் கீழப்பாவூர் ஒன்றிய தி.மு.க.சார்பில் பாவூர்சத்திரத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு அங்கு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மரு.கலை கதிரவன் முன்னாள் மாவட்ட செயலாளர் பொ.சிவபத்மநாதன் ஆகியோர் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர்.தொடர்ந்து 103 கிலோ லட்டு,103 ஏழை தாய்மார்களுக்கு சேலை,103 நபர்களுக்கு 5 கிலோ அரிசி,103 ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சீருடை போன்றவை வழங்கப்பட்டது. நிகழ்வில் ஊராட்சி மன்ற தலைவர் ராஜ்குமார் தொழிலதிபர் அதிபர்கள் சேவியர் ராஜன், ஆர்.கே.காளிதாஸ், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர்கள் அருணோதயம், இளங்கோ,மாவட்ட கவுன்சிலர் சாக்ரடீஸ் உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

# அரசியல் - கலைஞரிடம் கற்றுக்கொள்!



(ஐந்து விரல்களையும் பிரித்து காட்டுகிறார் )

“1980ஆம் ஆண்டு சட்ட மன்ற தேர்தல் முடிந்தது. திமுகவிற்கு படுதோல்வி! கட்சிக்குள் எழுச்சியை கொண்டு வர சில முயற்சிகள் செய்தார் தலைவர் கலைஞர். வலது கையின் ஐந்து விரல்களையும் விரித்து காட்டி உதயசூரியன் என்று சொல்ல ஆரம்பித்தார்.

உடன்பிறப்புகள் மத்தியில் ஒரு புத்துணர்வு.

எம்ஜிஆருக்கும் அந்த எழுச்சி புரிந்தது. எழுச்சியை அடக்க ஏதாவது செய்ய வேண்டுமே என யோசித்தார். தெரிந்த பத்திரிகையாளர் ஒருவர் மூலமாக, “முத்தமிழறிஞர் கலைஞர் ஐந்து விரல்களைக் காட்டுகிறாரே?” எனக் கேள்வி கேட்க வைத்தார். அதற்கு இன்ஸ்டன்ட் பதிலாக, “தான் ஒரு பஞ்சமா பாதகன் என்று கலைஞர் சொல்லாமல் சொல்கிறார் போல...” என எம்ஜிஆர் சொன்ன வார்த்தைகளில் தமிழகமே ஆடிப் போனது.

பத்திரிக்கையாளர்கள் தலைவர் கலைஞரின் பதிலை எதிர்பார்த்து ஓடினார்கள். கலைஞர் எங்கே இருக்கிறார் என்பதே பலருக்கும் தெரியவில்லை. இரவு 08:30 மணிக்கு பெரம்பூரில் ஒரு பொதுக்கூட்டம் நடப்பதாகவும் அதில் கலைஞர் பேசுவார் என்றும் தெரிய வந்தது. அதற்கிடையில் மாலை பத்திரிகைகளில், “கலைஞர் பஞ்சமா பாதகன்... எம்ஜிஆர் கடும் தாக்கு” என தலைப்பு செய்திகள் வரத் தொடங்கின. வானொலியிலும் எம்ஜிஆரின் வார்த்தைகளே முக்கிய செய்தியானது. அதனால், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அதற்கு என்ன பதில் சொல்லப் போகிறார் என மொத்த தமிழகமும் காத்துக் கிடந்தது.

பெரம்பூர் ராகவாச்சாரி தெருவில் பொதுக் கூட்டம். ஏழு மணிக்கே ஆயிரம் பேர் திரண்டிருந்தார்கள். குட்டி பேச்சாளர்கள் யாரும் இந்த பஞ்சமா பாதகன் விமர்சனம் பற்றி மூச்சுகூட விடவில்லை. சம்பிரதாயமாகப் பேசிவிட்டு அவர்களே கலைஞரின் பதிலுக்காகக் காத்திருந்தார்கள்.

பேப்பர் மில்ஸ் சாலையில் உள்ள காந்தி சிலையை நோக்கி மேடை. முன்னும் பின்னுமாய்க் கட்டுக்கடங்காத கூட்டம். பக்க வாட்டில் இருபுறமும் உள்ள அத்தனை சந்துகளிலும் கூட்டம். வீடுகளின் வாசல்கள் மேல் மாடிகள் எல்லாவற்றிலும் கூட்டம். சுமார் இருபதாயிரம் பேர் இருந்திருப்பார்கள். வரவேற்பது, துண்டு அணிவிப்பது, மாலை போடுவது எல்லாம் கடைசியில் என்று கலைஞர் சொல்லிவிட்டார். மேடையில் மயான அமைதி. மைக் பிடித்தார் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர்.

மைக்கை மட்டுமா பிடித்தார்? எம்.ஜி.ஆ.ரையும் சேர்த்து ஒரே பிடி பிடித்தார்.

“இன்று நண்பர் எம்.ஜி.ஆர். என்னை பஞ்சமாபாதகன் என்றார்.

ஏன் நான் பஞ்சமா பாதகனாம்?

ஐந்து விரல்கள் பிரித்துக் காட்டுகிறேனாம்.

அதனால் பஞ்சமா பாதகனாம்.

இப்படி ஐந்து விரல்களையும் பிரித்து காட்டினால் சைவ சமயத்தை பின் பற்றுபவருக்கு நமசிவாய என்கிற பஞ்சாட்சரம் நினைவுக்கு வரும்.

மகாபாரதம் படித்தவருக்கு பஞ்ச பாண்டவர், பாஞ்சாலி நினைவுக்கு வரும்.

தமிழன் என்றால் சிலப்பதிகாரம், மணி மேகலை,வளையாபதி, குண்டலகேசி, சீவக சிந்தாமணி என ஐம்பெரும் காப்பியங்கள் நினைவுக்கு வரும்.

இலக்கியப் புலவர் என்றால் ஐவகை நிலங்கள் நினைவுக்கு வரும்; ஐவகை திணைகள் நினைவுக்கு வரும்.

கர்நாடக சங்கீத ரசிகர் என்றால் தியாகைய்யர் அருளிய பஞ்ச ரத்ன கீர்த்தனை நினைவுக்கு வரும். ஆனால் நண்பர் எம்.ஜி.ஆ.ருக்கு என்று சொல்லி நிறுத்தி கொஞ்சம் இடைவெளி விட்டார் கலைஞர். கூட்டம் ஆர்ப்பரித்தது. தான் என்ன சொல்ல வருகிறேன் என்பதை மக்களின் எண்ணத்திற்கே விட்டார் கலைஞர்.

அரசியல் பேச்சு என்பது அப்படியல்லவா இருக்க வேண்டும். இன்றைக்கும் பேசுகிறார்களே... த்தூ! நல்லா வருது வாயில..”

**பலரும் சுட்டிக்காட்டி உள்ள இந்த கருத்தை கூட அறியாமலும், படிக்காமலும் இன்றைய அரசியல் தலைவராக பலர் பேசுவதைக் காண்கிறோம்.**



**முனைவர் பொன்னேரி சிவா**
தலைமைக் கழகப் பேச்சாளர்



தூத்துக்குடி மாவட்டம் புதூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டத்தில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ. வி. மார்க்கண்டேயன் கலந்து கொண்டு கூட்டு குடிநீர் பணிகள் மற்றும் சாலை வசதி பணிகள் மற்றும் பல்வேறு திட்டப் பணிகள் குறித்து ஆலோசனை வழங்கினார். நிகழ்வில் சசிகுமார்,தனலட்சுமி, ரவிச்சந்திரன், ஆனந்தவேல், புதூர் ஒன்றிய செயலாளர்கள் செல்வராஜ், ராதாகிருஷ்ணன், மும்மூர்த்தி, வேல்சாமி, ஸ்ரீதர் உள்ளிட்ட ஊராட்சி செயலர்கள் துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



தேனி வடக்கு மாவட்டம் பெரியகுளம் தொகுதி வடபுதுபட்டியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு முதியோர் இல்லத்தில் 200க்கும் மேற்பட்டோருக்கு முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சரவணகுமார் மதிய உணவு வழங்கினார். உடன் முகமது இலியாஸ், செல்வகுமரன், நாகஜோதி, அருணாச்சலம், பழனி முருகன், ஞான செல்வம், கிளை கழக செயலாளர்கள் முரளி, செல்வராஜ் செல்வன், கந்தசாமி, செந்தில்குமார், ரமேஷ், மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்



மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் எம்.எல்.ஏ. ஆலோசனையின் படி தமிழினத் தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மதுரை தெற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பாக திருப்பரங்குன்றம் வடக்கு பகுதியில் உள்ள 16 கால் மண்டபம் முன்பு வி.விமல் ஏற்பாட்டில் கிருஷ்ணா பாண்டியன், ஆறுமுகம், 98வது மாமன்ற உறுப்பினர் சுவிதா விமல் ஆகியோர் தலைமையில் பொதுமக்களுக்கு இனிப்புகள் மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் கழக நிர்வாகிகள் நீதிமன்னன், சிவக்குமார், இயேசு, குமரகுரு, ஜெயசீலன், முத்துகிருஷ்ணன்,பாண்டி, வேல்மணி, செல்வி, பூட்டோ, விஷ்ணுகுமார், சேகர், கார்த்தி, அண்ணாமலை உள்ளிட்ட திரளான கழகத்தினர் பங்கேற்றனர்.